**செ. கு. எண்: 222** **நாள்: 02.12.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

இரங்கல் செய்தி – 2.12.2018

தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமை வழக்கறிஞர் திரு. ஆர். முத்துக்குமாரசுவாமி அவர்கள் தனது 70-வது வயதில் இன்று (2.12.2018) உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

திரு. முத்துக்குமாரசுவாமி அவர்கள், 1994-ம் ஆண்டு தமிழ்நாடு அரசின் கூடுதல் வழக்கறிஞராகவும், பின்னர் தமிழ்நாடு அரசின் வழக்கறிஞராகவும் பதவி வகித்தவர். இவர் 2001-ம் ஆண்டு முதல் 2006-ம் ஆண்டு வரை தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞராகவும் திறப்பட பணியாற்றியவர்.

திரு. முத்துக்குமாரசுவாமி அவர்களின் சீரிய பணியினை அங்கீகரிக்கும் வகையில், 2016-ம் ஆண்டில் அவரை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாடு அரசின் தலைமை வழக்கறிஞராக நியமனம் செய்தார்கள். இவர் தனது திறமையான வாதத்தால் பல வழக்குகளில் வெற்றி கண்டவர்.

கடின உழைப்பாலும், திறமையான வாதத்தாலும், நீதித்துறையில் தனக்கென தனி இடத்தைப் பெற்றவர் திரு. முத்துக்குமாரசுவாமி அவர்கள். அன்னாரின் மறைவு நீதித்துறைக்கு பேரிழப்பாகும்.

திரு. முத்துக்குமாரசுவாமி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**